(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.5/2016 |
| Deposition Of Witness for | : | PW10 |
| Name | : | **திரு.நேசமணி** |
| Father's Name | : | திரு.சுந்தரராஜு |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **5th February 2026.**

(எதிரிகள் 1, 2, 4, 6, 11 ஆஜர். எதிரிகள் 3, 7, 8, 9, 10 மற்றும் 12 ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317-ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 5 வது எதிரி இறந்துவிட்டதால் அவருக்கு எதிரான குற்றச்சாட்டு அற்றுப்போய்விட்டது.) It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது திருச்சியில் வனத்தோட்ட கழகத்தில் உதவி வன பாதுகாவலாக(பறக்கும்படை) பணியாற்றி வருகிறேன். கடந்த

01.06.2006 ல் தான் தமிழ்நாடு வனத்தோட்ட கழகத்தில் பன்ருட்டியில் வனவராக பணியில் சேர்ந்தேன். கடந்த 2008 முதல் 2009 வரை அழகாபுரி வனப்பிரிவில் வனவராக பணிபுரிந்தேன். அது புதுவயல் வனச்சரகத்தினை சார்ந்தது. அப்போது எனக்கு மேல் அதிகாரியாக வனக்காப்பாளராக திரு.இராதாகிருஷ்ணன் என்பவரும், வனக்காவலராக திரு.அரசு என்பவரும் பணியாற்றினார்கள். எனக்கு மேல் அதிகாரியான வனச்சரகராக திரு.ஆறுமுகம் என்பவரும் மண்டல மேலாளராக திரு.நைனார் முகமது அவர்களும் பணியாற்றினார்கள்.

2. வனத்தோட்ட கழகத்தில் யூகலிப்டஸ் மரங்களை வளர்ப்பதுதான் முதன்மையான பணியாகும். யூகலிப்டஸ் கன்றுகள் நடப்பட்ட பின்பு அதை பராமரித்து பாதுகாத்து வளர்த்து TNPL நிறுவனத்திற்கு பேப்பர் தயாரிப்பதற்கு அனுப்பப்படும். சம்பவ காலத்தில்தான் நான் புதிதாக பணிக்கு சேர்ந்திருந்ததால் எனக்கு என்று பெரிய அளவில் தனிப்பட்ட வேலைகள் எதுவும் கிடையாது. மற்ற சரகத்தில் தோட்ட பணிகள் நடக்கும். பெட்டி கான்டராக்ரரை நியமனம் செய்து வேலைகள் பார்ப்பார்கள். பெட்டி கான்டராக்ருக்கு ரூ.20000/– தொகை வரை செலுத்தி வேலைக்கு வனவர் அமர்த்துவார்.

3. பொதுவாக ஒப்பந்தகாரர்களிடம் வேலையை முடிக்க வேண்டும் என்றால் 26 சதவீத கமிசன் கொடுக்க வேண்டும் என்று வனச்சரகர் கேட்பார்கள். அப்போது அவ்வாறான நடைமுறைதான் இருந்தது. தமிழ்நாடு வனத்தோட்ட கழக ஊழியர் சங்கத்தில் நான் உறுப்பினராக இருந்தேன். கடந்த 2009-ம் ஆண்டு வனச்சரகர்கள் கமிசன் பணம் கட்டாயமாக கொடுக்க வேண்டும் என்று கேட்பது குறித்து கூட்டத்தில் பேசி அது குறித்து தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. ஆனால் என்ன தீர்மானம் நிறைவேற்றினார்கள் என்று குறிப்பிட்டு எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் **தீர்மானத்தில்(அ.த.சா.ஆ.22) உள்ள 8 வது கையொப்பம்** என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் **அ.த.சா.ஆ 27** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கு தொடர்பாக ஊ.த.க பிரிவு காவல் ஆய்வாளர் விசாரணை செய்தார்கள்.

(***அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரப்பட்டு நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)***

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :

1. என்னை ஊ.த.க பிரிவு காவல் ஆய்வாளர் விசாரணையின்போது கடந்த 02.10.2009-ம் தேதியன்று பள்ளத்தூர்

வனப்பிரிவில் களத்தணிகை செய்ய சென்றிருந்த காரைக்குடி மண்டல மேலாளர் திரு.நைனார் முகமது அவர்கள் வனவர் அழகேசனிடம் நீங்களே ஒப்பந்தாரர்களிடம் ஒப்பந்தம் செய்து கொண்டு 100 சதவீத வேலையை முடிக்க வேண்டும் ஆனால் 26 சதவீத கமிசன் கட்டாயம் எங்களுக்கு கொடுக்க வேண்டும் என்று அவரை மிரட்டியுள்ளார் என்றும் காரைக்குடி, சிவகங்கை மற்றும் புதுவயல் வனச்சரகர்கள் ஆகியோரும் 26 சதவீத பணத்தை எங்களால் விட்டுக்கொடுக்க முடியாது என்று கூறி இன்று வரை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதனை எதிர்த்து தமிழ்நாடு வனத்தோட்ட கழக ஊழியர் சங்கத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதா என்றால் ஆமாம், போலிசாரிடம் மேற்படி சங்கதியை கூறினேனா என்றால் ஆமாம், விசாரணையின்போது நான்தான் கூறினேன். வனத்தோட்ட கழக ஊழியர் சங்கத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது குறித்து தெரிந்து கொண்டு கையொப்பம் செய்து விட்டு முதல் விசாரணையில் எதிரிகளை காப்பாற்றும் நோக்கோடு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>1, 2, 6, 9, 11 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

(மற்ற எதிரிகள் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள்.)

1. வனத்தோட்ட கழக ஊழியர் சங்கத்தில் தீர்மானத்தில் என்ன எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதை

படித்துப்பார்க்காமல் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் பணியில் அழகாபுரில் கடந்த 01.11.2008 அன்றுதான் பணியில் சேர்ந்தேன் என்றால் சரிதான். எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளானது 01.04.2009 முதல் 26.08.2009 வரையுள்ள காலக்கட்டத்தில்தான் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த காலக்கட்டத்தில் நான் புதுவயல் வனவராக இருந்தேன் என்றால் சரிதான்.

2. காரைக்குடி மண்டல மேலாளரைப் பொறுத்தவரையில் எந்தெந்த சரகத்திற்குரிய பணியை மேற்கொள்வார் என்றால் கல்லல், சிவகங்கை, காரைக்குடி, புதுவயல் ஆகிய சரகத்திற்குரிய பணியை மேற்கொள்வார். 2005–ம் ஆண்டு தைல மரங்கள் நடப்பட்டு 4, 5 வருடங்கள் அந்த மரங்கள் வளர்க்கப்பட்டு டிராக்டர் வைத்து உழுது பல்பு எடுக்கப்பட்டு கரூர் TNPL நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டு பெரும் லாபம் ஈட்டப்பட்டது என்றால் சரிதான். வனத்தோட்டகழகத்தினை பொறுத்தமட்டில் வனக்காவலர், வனக்காப்பாளர், வனவர், வனச்சரகர், மண்டல மேலாளர் என்ற நிலையில்தான் பணிபுரிவார்கள் என்றால் சரிதான்.

3. மண்டல மேலாளர் சரகத்தில் மொத்தம் 25 சதவீதம் பணி நடைபெற்றிருக்கிறது என்பதை ஆய்வின்போது கண்டறிந்தால் மட்டுமே

போதுமானது என்றால் சரிதான். பெட்டி கான்ட்டிராக்டர்களுக்கு டென்டர் ஏலம் விடுவது கிடையாது என்றால் சரிதான். பெட்டி கான்ட்டிராக்டர்களை வனவர், வனக்காவலர், வனக்காப்பாளர் ஆகியோர்கள்தான் வேலை வாங்குவார்கள் என்றால் சரிதான். வனச்சரகர் 100 சதவீதம் பணியை முடித்துவிட்டார்களா என்பதை பார்வையிட வேண்டும் என்றால் ஆமாம். சம்பவ காலத்தில் நான்கு சரகத்திலும் வேலைகள் முழுமையாக நடந்தது என்றால் சரிதான். முழுமையாக வேலை நடந்ததால் கையாடல் நடப்பதற்கு வாய்ப்பு இல்லை என்றால் அதுகுறித்து நான் சொல்ல இயலாது.

4. அழகேசனிடம் மண்டல மேலாளர் சொன்னது குறித்து எனக்கு எப்படி தெரியும் என்றால் தீர்மானம் நிறைவேற்றும் சமயத்தில் அது குறித்து பேசினார்கள் அது குறித்து எனக்கு தெரியும். நேரடியாக எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை:** இல்லை.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

ANITHACHRISTY J

Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.02.05 14:58:52 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.